2003 ஏப்ரல் 23]

எனவே தகுதியான இடமாக நாங்கள் தேர்வு செய்து முறையாக அரசின் மூலமாக அறிவிப்புச் செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எம். பாலன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மாவட்ட வடக்குப் பகுதியில் தொட்டியம், தாத்தையங்கார்பேட்டை, முசிறி, மணச்சநல்லூர், உப்பிலியாபுரம், துறையூர், புள்ளம்பாடி, லால்குடி ஆகிய 8 ஒன்றியப் பொதுமக்களும் திருச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் செல்கிறார்கள். அது இடம் மாறுமானால் லால்குடிக்கு வந்தால்தான் கஷ்டமில்லாமல் மக்கள் வரமுடியும். திருச்சியில் போக்குவரத்து நெரிசல் உள்ளது. அதோடு லால்குடி புறநகர்ப் பகுதியிலுள்ளதால் டிராஃபிக் இல்லாமல் நோயாளிகள் வருவதற்கு சுலபமாக இருக்கும். மேலும் மேற்படி ஒன்றியத்திலிருந்து திருச்சி வரும் தூரமும், லால்குடி செல்லும் தூரமும் ஒரே தூரமாகும். எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக, கனவாக இது இருந்து வருகிறது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும், அதேநேரத்தில் மாவட்ட மக்களுடைய வசதியும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 289, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

289—

சத்துணவுக் கூடங்கள்

***23497—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் 15 சத்துணவுக் கூடங்கள் பழுதடைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டு ரூ. 1,69,000 செலவில் செப்பனிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை ஒன்றியம், மடத்துக்குளம் ஒன்றியம் ஆகிய இரண்டு ஒன்றியங்களை உள்ளடக்கிய பகுதியாக உள்ளது. அதிலேயும், மடத்துக்குளம் ஒன்றியத்திலுள்ள 59 சத்துணவுக் கூடங்களிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய இடங்கள் போக மீதமுள்ள இடங்களில் ஆத்தூர், நீலம்பூர் கிழக்கு, நீலம்பூர் மேற்கு, போத்தநாயக்கனூர், கண்ணாடிப்புத்தூர், உடையார்பாளையம், தாமரைப்பாடி போன்ற இடங்களிலே கட்டடங்கள் மிகவும் மோசமாக உள்ளன. நடப்பாண்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவற்றை செப்பனிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று உங்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை தொகுதியிலே உள்ள மொத்த மையங்களின் எண்ணிக்கை 111. மடத்துக்குளம் ஒன்றியத்திலுள்ள மையங்களின் எண்ணிக்கை 59. இவற்றில் 15 சத்துணவுக் கூடங்கள் மட்டுமே மிகவும் பழுதடைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டு இப்போது அவை செப்பனிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியிலே சில இடங்களைக் குறிப்பிட்டு இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதை எழுத்து மூலமாக எங்களிடத்திலே தருவாரேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 ஏப்ரல் 23]

[மாண்புமிகு பேரவைத் தலைவர் - தலைமை]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உடுமலைப்பேட்டை தொகுதியிலே அங்கன்வாடி அலுவலகமானது கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு பாதியிலே நிற்கிறது. எங்களது கோவை மாவட்டத்தில் மட்டும் 11 இடங்களிலே அங்கன்வாடி கட்டடங்கள் பாதியிலே நிலுவையிலே உள்ளன. அவை உலக வங்கித் திட்டத்தின் மூலமாக கட்டக்கூடியவை. அதற்கு நிதியுதவி வரவில்லையென்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நடப்பாண்டிலே உரிய நடவடிக்கை எடுத்து, அந்தக் கட்டடங்களை இந்த ஆண்டே கட்டிக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிலிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 290, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

290—

மாணவர் விடுதி

***20964—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, சேவூர் பகுதியில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி நடப்பு நிதியாண்டில் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிதாக மாணவ மாணவியர் விடுதிகள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.